இந்திய உயர் ஸ்தானிகராலயம்
கொழும்பு

ஊடக அறிக்கை

இலங்கைக்கு காசநோய் எதிர்ப்பு மருந்துகளை நன்கொடையாக வழங்கிய இந்தியா

கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சில் இன்று நடைபெற்ற நிகழ்வொன்றில் அத்தியாவசிய காசநோய் எதிர்ப்பு மருந்து தொகுதி ஒன்றை இலங்கை அரசிடம் இந்திய அரசாங்கம் கையளித்துள்ளது. இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்களால் இலங்கை சுகாதார மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கௌரவ டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ அவர்களிடம் இம்மருந்து தொகுதிகள் ஒப்படைக்கப்பட்டன. சுகாதார மற்றும் வெகுஜன ஊடகத்துறை பிரதி அமைச்சர் டாக்டர் ஹன்சக விஜேமுனி அவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார்.

2. அத்தியாவசிய காசநோய் எதிர்ப்பு மருந்துகள் இலங்கையில் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, இலங்கை அரசாங்கத்தால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் இந்த மருந்து தொகுதி நன்கொடையாக வழங்கப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் ஆதரவுடன் இம்மருந்து தொகுதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

3. இத்தொகுதியில் சுமார் 3 தொன்கள் நிறையுள்ள அத்தியாவசிய காசநோய் எதிர்ப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளதுடன் 1.5 மில்லியனுக்கும் அதிகமான வில்லைகள் இதில் அடங்கியுள்ளதுடன் இவற்றின் பெறுமதி 52 மில்லியன் இலங்கை ரூபாவாகும். மேலும், காசநோய் சிகிச்சைக்காக பயன்படுத்தப்படும் அவசியமான 'முதல்-நிலை' மருந்துகள் இதில் அடங்குவதுடன் இது இலங்கையில் காசநோயாளிகளுக்கான சிகிச்சை தொடர்ச்சியாக வழங்கப்படுவதனை உறுதிப்படுத்தவும், மருந்துகள் தடையின்றி கிடைக்கவும் வழிசமைக்கின்றது.

4. அத்துடன், இலங்கையின் பொது சுகாதாரத் தேவைகளுக்கு இந்தியா வழங்கும் உரிய நேரத்திலான பதிலளிப்பிற்கு இந்த உதவி மற்றொரு உதாரணமாகும். முன்னர், டெங்கு நோய்க்கு எதிரான இலங்கையின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையை ஏற்று, 500 லீட்டர் 'தொழில்நுட்ப மலத்தியோன்' மருந்தையும் 2026 ஆகஸ்டில் இந்தியா நன்கொடையாக வழங்கியிருந்தது.

5. சுகாதாரத் துறையில் இந்தியாவும் இலங்கையும் நீண்டகால மற்றும் பரந்தளவிலான பங்குடைமையைக் கொண்டுள்ளன. இத்துறையில் இந்தியாவின் அபிவிருத்தி ஒத்துழைப்பானது, வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்குதல், மற்றும் திறன் விருத்தி மற்றும் பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கியது. குறிப்பாக அவசர காலங்கள் மற்றும் அவசர மருத்துவத் தேவைகளின் போதும் இந்தியா இலங்கைக்கு அவசர உதவிகளை வழங்கியுள்ளது.

6. இந்நிலையில் அண்மையில் வழங்கப்பட்ட இந்த உதவியானது, இலங்கை அரசாங்கம் மற்றும் மக்களால் அடையாளம் காணப்பட்ட முன்னுரிமை அடிப்படையான தேவைகளுக்கு பதிலளிப்பதில் கவனம் செலுத்தி, இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கையின் வழிகாட்டுதலின் கீழ், இலங்கையுடனான மக்களை இலக்காக கொண்ட அபிவிருத்தி பங்குடைமையில் இந்தியா கொண்டுள்ள தொடர்ச்சியான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றது

****

கொழும்பு
07 ஒக்டோபர் 2026